1975 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு மணி நேரத்தில் விவாதத்தை முடித்து விட்டு அடுத்த டிமாண்டை எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. இப்போது மணி 10–10. 11–10-க்குள் விவாதம் முடியவேண்டும்.

(5) துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு அதிக வாய்ப்புகள் அளிப்பது குறித்த வேண்டுகோள்.

Dr. H. V. HANDE: Mr. Speaker, Sir, I have been trying to point out in this House several times that so far as the Supplementary Budget is concerned, this House does not get adequate opportunity to discuss it. In fact, yesterday in the Legislative Council for nearly three hours they were able to discuss it. Sir, I am not casting aspersion on the other House. What I am trying to point out is that the opportunity given to the other House to discuss it at length is not given to this House. This has been going on for a number of years and I have been continuously battling on this aspect of the matter. Sir, after the discussion on the Supplementary Budget, we will pass it and then the Supplementary Budget will come in the form of an Appropriation Bill and when that Bill is brought before the House we are not given an opportunity to discuss it even though it is a Money Bill. Even though the other House has no right to vote on the Money Bill, they have been given ample opportunity to discuss it at length and any number of Members speak on it. I have been continuously fighting on this point and I have brought it to your kind notice a number of times. Sir, I am very much hurt and pained that this House is being neglected in this way. You kindly look into this aspect of the matter and take whatever decision you like.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை உணர்ந்து கொள்கிறேன். மேலவையில் இந்த டிமான்ட்ஸ் பெரு வாரியாக விவாதிப்பதில்லை. அங்கே பெரிய அளவில் விவாதம் செய்திருக் கலாம். விவாதம் அதிக நேரம் கூடாது என்பது அல்ல. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முதலில் இதற்கு இவ்வளவு நேரம் என்று முடிவு எடுத்து விட்டு அதன்படி நடக்க வேண்டும். அம்முடிவின்படி துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொள்வது என்பதாகும். டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்தை கட்சித் தலைவர்களிடம் சொல்லி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அந்த முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் உறுப்பினர்களின் உரிமை களைக் காப்பாற்றுவதற்குத் தயாராக இருக்கிறேன். அங்கே முடிவு எடுத்துவிட்ட பிறகு அதன்படிதான் நடக்க வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவு சப்ளிமெண்டரி டிமாண்டு முடிந்தவுடன் விவசாய மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்வது என்று. அதற்கு கடைசியில் அரை மணி அல்லது ஒரு மணி நேரம் தான் வரும். ஆகவே துணைமானியக் கோரிக்கை மீதான விவாதத்தை 1 மணிக்குள் முடித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்ற ஆண்டு கூட இக் கோரிக்கையை 10 மணிக்கு எடுத்து 11 மணிக்கு முடித்திருக்கிறோம். அந்த முறையை ஒட்டித்தான் இப்போது சொல்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வோட் ஆன் அக்கவுண்ட், அப்ராப்ரியேஷன் பில் பொறுத்தவரையில் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்வதில்லையென்று ஏற்றுக் கொண்டோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேண்டாம் என்று சொல்லவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சில முக்கியமான விஷயங்கள் வரும் பொழுது, ஒரு மணிக்குள் முடிக்க வேண்டுமென்றால், டிமாண்டைப் போட்டு ஒவ்வொன்றுக்கும் கட் மோஷன் சொல்லி முடிப்பதற்கு 20 நிமிஷம் ஆகிவிடும். பின் பேசுவதற்கு 40 நிமிஷங்கள் கூட இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு இருக்கக்கூடிய குறைபாடுகள்—அப்ராப்ரியேஷன் பில்லைப் பொறுத்தவரையில் பிசினஸ் அட்வைசரி கமிட்டி முடிவு செய்கிறார்கள். அதை ஏற்றுக் கொள்ளுகிறோம். மறுக்கவில்லை. பல நேரங்களில் ஏற்படக் கூடிய சங்கடங்களைச் சொல்லுகிறேன். 1967-68-ம் ஆண்டை எடுத்துக் கொண்டு பார்த்தால்—அப்ராப்ரியேஷன் பில் வருகிற நேரத்தில் திடீரென்று ஒரு பிரச்னை வருகிறது, அந்த நேரத்தில் அது பற்றி பேசியது உண்டு. பிசினஸ் அட்வைசரி கமிட்டியின் முடிவு என்று இருந்தாலும் அப்போது மதிப்புக்குரிய ஆதித்தனார் அவர்கள் பேரவைத் தலைவராக இருந்தார்கள்; திடீரென்று ஒரு பிரச்னை வந்தது. பேசவேண்டுமென்று கேட்டோம். அவர் வாய்ப்புக் கொடுத்தார். மேலவையில் திரு. எ. எல். முதலியார் அவர்கள்—அப்ராப்ரியேஷன் பில் வந்த நேரத்தில் ஒரு பிரச்னை வந்தது—அப்போது ஐந்து நிமிஷங்கள் பேச வேண்டுமென்று கேட்டார்கள். உடனே அதை ஒத்துக்கொண்டார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் ஒத்திவைப்புத் தீர்மானம் வந்தால் அவசரம் இல்லையென்று மறுக்கிறீர்கள். அப்ராப்ரியேஷன் பில் வந்தால் அதையொட்டி பிரச்னைகளைப் பற்றி பேச வாய்ப்பு இருக்கும். சென்ற தடவை வோட் ஆன் அக்கவுண்ட் நேரத்தில் திடீரென்று ஒரு பிரச்னை வந்தது. அதுபற்றி பேசுவதற்கு 5 நிமிஷங்கள் கேட்கப்பட்டது. ஆனால் அது மறுக்கப்பட்டது. இருக்கக்கூடிய சங்கடங்களைச் சொல்லுகிறேன்

[டாக்டர் எச். வி. ஹாண்டே]

1975 மார்ச் 25]

முக்கியமான மணி பில் அப்ராப்ரியேஷன் பில், சப்ளிமெண்டரி பட்ஜெட், இவைகளுக்கு கட் மோஷன் கொடுக்க உரிமை இருக்கிறது. அப்படியிருந்தும், தயவுசெய்து சொல்ல வாய்ப்புக் கொடுங்கள். ரூல்ஸ பிரகாரம் நடக்க உரிமை இருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தும் ஒரு மணி நேரம் முக்கால் மணிநேரம் என்று கட்டுப்படுத்தினால் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லுவது போலாகும். சட்டமன்றத்தில் முழுக்க முழுக்க நடைபெறக்கூடிய விவாதங்களில் பேசக்கூடிய வாய்ப்புகள் தடுக்கப்படுகிறமாதிரி ஒரு அதிருப்தி மன்றத்தின் உறுப்பினர்கள் மத்தியில் இருக்கிறது என்பதை உங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நாள் அல்லது இரண்டு நாள் விவாதம் செய்யலாம். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நாம் எடுத்துக்கொண்ட முடிவைச் சொல்லுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்றைக்கு நேரம் கொஞ்சம் கொடுங்கள். நேற்றைய மானியத்தைப் பொறுத்தவரையில் 2 மணி வரை நீட்டினோம். நாம் இன்றைக்கு 1 மணிக்கு முடிக்க வேண்டிய நிலைமையிருக்கிறது. நேரத்தை சுருக்கி விவாதத்தைத் தொடங்கலாம். சப்ளிமெண்டரி டிமான்ட்ஸ் மீது விவாதம் நடந்து பின்னடி கட் மோஷனைத் துவக்குவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் 1 மணியுடன் விவாதத்தை முடித்துக் கொள்ளலாம் என்றார். முடிந்த பிறகு விவசாய மானியக் கோரிக்கையை எடுத்துக் கொண்டால் அது நாளை மறு நாள் வியாழக்கிழமையும் வருகிறது. அந்த நாளில் முடித்து விடுவதாக முடிவு. இன்று ஒரு மணி வரை விவாதத்தை வைத்துக் கொண்டு நாளை மறு நாளோடு அடுத்தக் கோரிக்கையை முடித்துக் கொள்வதானால் இப்போது ஒரு மணி வரை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணிக்கு இதை பேசி முடிப்பது என்று சொன்ன பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எதற்கு ? ஒரு மணிக்கு எடுத்துக்கொள்வது என்று முடிவு ஆகிவிட்டது.

கோவை செழியன் அவர்கள் உறுப்பினர் வீராசாமி பற்றி ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். அது நிகழ்ச்சிக் குறிப்பில் ஏற வேண்டாம் என்று உத்தரவிடுகிறேன். பத்திரிகையிலும் செய்தியாக ஏறவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.